Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, ஜனவரி 12, 2022

## *நெஸ்டமோல்ற்று* 'Buddhi Prabhodaya' க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு மாணவர்கள் 100% தம்மைத் தயாராக்கிக் கொள்ள உதவுகிறது

*உயிரியல் மற்றும் பௌதிகவியல் விஞ்ஞானத் துறைகளில் இணையக் கருத்தரங்கு தொடர்*

நெஸ்லே நிறுவனத்தின் தயாரிப்பான *நெஸ்டமோல்ற்று*, 2022 பெப்ரவரியில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு உதவுவதற்காக 'Buddhi Prabhodaya' இணையக் கருத்தரங்கு தொடரை தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக நடாத்துகின்றது. இந்த முயற்சியானது, மேல் மாகாண கல்வித் திணைக்களத்துடன் இணைந்து 2021 டிசம்பர் 6 ஆம் திகதி முதல் 2022 ஜனவரி 27 ஆம் திகதி வரை 45 மெய்நிகர் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்கின்றது.

*நெஸ்டமோல்ற்று* Buddhi Prabhodaya முயற்சியானது 2019 ஆம் ஆண்டில் மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலைகள் மத்தியில் வினா,விடைப் போட்டியுடன் ஆரம்பிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் கொவிட்-19 இலங்கையில் பரவ ஆரம்பித்திருந்த நிலையில், தொற்றுநோயால் எழுந்த சவால்களுக்கு மத்தியிலும் மாணவர்கள் 100% பரீட்சைக்குத் தயாராக இருப்பதற்கு வலுவூட்டும் வகையில், இந்த முயற்சியானது இணையக் கருத்தரங்குத் தொடராக மாற்றியமைக்கப்பட்டது.

மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளரான திரு. பீ. ஸ்ரீலால் நோனிஸ் அவர்கள் தெரிவிக்கையில், "உயர்தர மாணவர்களின் கல்விக்கு உதவும் எமது முயற்சிகளின் ஒரு பகுதியாக, *நெஸ்டமோல்ற்று* Buddhi Prabhodaya இணையக் கருத்தரங்குத் தொடருக்கு தொடர்ந்து அனுசரணை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். குறிப்பாக கல்விக்கு இடையூறாக இருக்கும் தொற்றுநோய் நிலைமையின் பின்னணியில், வெற்றி பெறுவதற்கு நமது இளைஞர்,யுவதிகளுக்குத் தேவையான வலுவூட்டல் வழங்கப்பட வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த கருத்தரங்கு அமர்வுகளைப் பயன்படுத்தி, பயன்பெற்றுக் கொள்ளுமாறு மாணவர்களை ஊக்குவிக்கிறோம்," என்று குறிப்பிட்டார்.

"பல ஆண்டுகளாக, இலங்கையில் தலைமுறை தலைமுறையாக குடும்பங்கள் தங்கள் இலட்சியங்களை அடையவும், வாழ்க்கையில் முன்னேறவும் 100% தயாராக இருக்க *நெஸ்டமோல்ற்று* உதவி வந்துள்ளது. வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க ஒரு சாதனை இலக்கினை எதிர்கொள்ளத் தயாராகும் இளைஞர், யுவதிகளின் மனதை உற்சாகப்படுத்த, இலங்கையில் கல்விக்கு உதவுவதும், நாட்டின் புகழ்பெற்ற ஆசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களுடன் ஒத்துழைப்பதும் ஒரு பெரும் பாக்கியம்," என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் பாலை மூலமாகக் கொண்ட தயாரிப்புக்களுக்கான துணைத் தலைமை அதிகாரியான திரு. ருவான் வெலிகல அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்.

*நெஸ்டமோல்ற்று* Buddhi Prabhodaya கருத்தரங்குத் தொடர் ஸூம் (Zoom) தொழில்நுட்பத்தின் ஊடாக நடத்தப்படுகிறது. ஒருங்கிணைந்த கணிதம், இரசாயனவியல், உயிரியல் மற்றும் பௌதிகவியல் ஆகிய பாடங்களின் மீளாய்வுகளை இக்கருத்தரங்கு உள்ளடக்கியுள்ளது. அனைத்து அமர்வுகளும் பதிவு செய்யப்பட்டு, மேலும் பார்த்து விளங்கிக் கொள்வதற்காக நெஸ்லே லங்கா நிறுவனத்தின் யூடியுப் (YouTube) தளத்தில் பதிவேற்றப்படுகின்றன. இணைய கருத்தரங்குகளில் இணைந்து கொள்ள, மாணவர்கள் *நெஸ்டமோல்ற்றின்* முகநூல் மற்றும் இன்ஸ்டாகிராம் பக்கங்களில் வழங்கப்பட்டுள்ள ஸூம் (Zoom) பதிவுக்கான இணைப்பு வழியாக பதிவு செய்யலாம்.

ஸூம் (Zoom) பதிவுக்கான இணைப்பு: https://bit.ly/3qZR5RU
நெஸ்லே லங்கா நிறுவனத்தின் யூடியூப் தளம்: https://bit.ly/3thShmr

நெஸ்லே நிறுவனம் 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை மக்களின் வாழ்வை வளப்படுத்தி வருகிறது. நிறுவனத்தின் முதன்மையான வர்த்தகநாமமான, *நெஸ்டமோல்ற்று* 50 வருடங்களுக்கும் மேலாக இலங்கையிலுள்ள குடும்பங்களின் நம்பிக்கையை வென்றெடுத்து, அவர்களால் அருந்தி மகிழப்பட்டு வருகிறது. பிரத்தியேகமாக இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்ற,

*நெஸ்டமோல்ற்று* நாட்டில் மிகவும் அபிமானம் பெற்ற தனித்துவமான மோல்ற்று அடங்கிய பானமாகும். இது மோல்ற்று பார்லி மற்றும் பாலின் நலச்செழுமையை வழங்குவதுடன், அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களின் செறிவும் நிரம்பியது. விட்டமின் பி2 (B2), பி3 (B3), பி6 (B6) மற்றும் பி12 (B12) ஆகியன வழக்கமான சக்தி மூல வளர்சிதை மாற்றத்திற்கு பங்களிக்கின்றன. மற்றும் விட்டமின் பி6 (B6), பி12 (B12), இரும்புச்சத்து மற்றும் விட்டமின் சி (C) ஆகியன கற்றல் மற்றும் கவனச்செறிவு போன்ற இயல்பான உளவியல் செயல்பாடுகளுக்கு பங்களிக்கின்றன.

**100 கிராம் நெஸ்டமோல்ற்றில் 2 மிகி விட்டமின் B2, 21 மிகி விட்டமின் B3, 2 மிகி விட்டமின் B6, 3 மைகி விட்டமின் B12, 17மிகி இரும்புச் சத்து மற்றும் 79 மிகி விட்டமின் C அடங்கியுள்ளன*

---

**தொடர்புகளுக்கு:**


| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |